| | | |
|---|---|---|
| அ.வ.எண். | **:** | **200/2017** |
| தேதி | **:** | **03.02.2026.** |
| பெயர் | **:** | **கிருஷ்ணகுமார் த/பெ குமரன் நாயர்.** |

**பி.வா.த.சா. 1 (DW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**<u>பி.வா.த.சா. 1. (DW1) குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1) வாதியானவர் எனக்கு சொந்தமான சொத்தினை அபகரிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து K.B வாசுதேவன் என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் இல்லை. நான் HSBC வங்கியில் ஏலத்தின் மூலமாக தாவா சொத்தினை கிரயம் பெற்றேன். K.B வாசுதேவன் என்பவர் HSBC வங்கியில் தாவா சொத்து சம்பந்தமாக அசலை வைத்து ஏதேனும் கடன் வாங்கியிருந்தாரா என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

2) தாவா சொத்தானது எண். 4,5, கங்கா நகர், மணிமங்கலம் கிராமம் என்ற முகவரியில் உள்ளது. தாவா சொத்து அருகில் வேறு ஏதேனும் அனுமதிக்கப்பட்ட வீட்டு மனைகள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் வாங்கிய HSBC வங்கியின் முகவரி HSBC, பாரிஸ் கார்னர், சென்னை ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சி கையொப்பம் Sd/. கிருஷ்ணகுமார்.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.